www.padippakam.com

# கடல் கடந்த தொழிலாளி

ஏப்ரல் - ஜூன் 2003 தனிச்சுற்றுக்கு மட்டும் இதழ்: 5



## "எங்கள் பிள்ளைகளை மீட்டுத் தாருங்கள்!"

### மலேசியாவில் தவிப்போரின் பெற்றோர் குமுறல்

படிப்பகம்

www.padippakam.com

# ஆசிரியர் பக்கம்...

சம்பளம், உணவு கேட்டதால் அடி, உதை: தமிழக தொழிலாளர்கள் சித்ரவதை!, மலேசியப் போலீஸ் அத்துமீறல்- 270 இந்தியர்கள் கைது, மலேசியத் தமிழர்கள் அடித்துச் சித்ரவதை, மாலத்தீவில் தமிழர்கள் கொத்தடிமைகளா?" என்று தினந்தோறும் நாளேடுகளில் தமிழ்த் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் பல அவஸ்தைகளுக்குள்ளாகும் செய்தி படித்துப் படித்து, வெளிநாடு செல்லும் தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் உரிமைகள் எப்போது கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் ஒரு செய்தி மனதிற்கு ஆறுதலை அளித்துள்ளது. ஆம், 'மாலத்தீவிற்கு சென்று அரசாங்கத்துடன் பேசி அங்கு சிறைகளில் உள்ள தமிழர்களை மீட்டு வருவேன்' என்று சிவகங்கை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரான திரு.சுதர்சனநாச்சியப்பன் கூறியதுதான்.

அதைவிட மிகவும் பாராட்டத்தக்கச் செய்தி மாண்புமிகு தமிழக முதல்வரின் கவனத்திற்காக நாம் அனுப்பிய கடல்கடந்த தொழிலாளர் சார்பிலான கோரிக்கைகள் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டன என்பது. முதல்வருக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

நாட்டில் சட்டத்தை நிறைவேற்றும் உரிமை இருக்கக்கூடிய ஒரு பாராளுமன்ற உறுப்பினர் குடிபெயரும் தொழிலாளர்களின் நிலையை தெரிந்து கொண்டு அதற்காக செயல்பட முன்வருவது பாராட்டுதலுக்குரியதே. இதே போன்று இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொழில்சங்க பிரதிநிதிகள், அரசாங்க அலுவலர்கள், சமுதாய ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்பி வைக்கும் வேலை வாய்ப்பு நிறுவனங்கள் மற்றும் பத்திரிகைகள் குடிபெயர் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக செயல்பட முன்வந்தால் குடிபெயர் தொழிலாளர்களின் உரிமைகளை நிலை நிறுத்தும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

அன்புடன்,
*ஜே. பால்பாஸ்கர்*

ஆசிரியர்:
**ஜே.பால்பாஸ்கர்**

உதவி ஆசிரியர்:
**செந்தில்வேல்**
0451-2410021

சென்னை தொடர்பாளர்:
**இராமச்சந்திரன்**
044-24348922

இணையத்தில் படித்திட...
www.pasumaiulagam.com

மின்னஞ்சல்:
peacetrust@vsnl.com



படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே...

## மலேசியா:


மலேசியாவில் தவிக்கும் 69 தமிழக இளைஞர்கள் 04
கோலாலம்பூரில் வேலை வாய்ப்பு தகவல் மையம் 06
இந்தியக் கணிப்பொறியாளர்கள் 270 பேர் கைது! 07
சம்பளம், உணவு கேட்டதால் தமிழகத் தொழிலாளர்கள் சித்ரவதை 08
கசையடி கொடுக்கும் சட்டத்தை பரிசீலிக்க கோரிக்கை! 10
மலேசியாவுக்குக் கடத்தப்படும் பெண்கள் 12
20 ஆயிரம் இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பு! 14


## துபாய்:


நட்சத்திரக் கலைவிழா தேவையா? 15
பொதுமன்னிப்பில் நாடுதிரும்பத் தயாரான இந்தியர்கள் 16
முதலாளிக்கு எதிராக 65 தொழிலாளர்கள் வழக்கு! 18
இந்தியத் தொழிலாளிகளுக்கு சாதகமானது தீர்ப்பு! 20


## மாலத்தீவ:


சிறைப்பட்டுள்ள தமிழர்களை மீட்க சுதர்சன நாச்சியப்பன் முயற்சி! 21


## அபுதாபி:


சட்டவிரோதக் குடியேறிகளுக்கு புகலிடமா எமிரேட் நாடுகள்? 22


## தமிழ்நாடு:


வேலை உத்திரவாதம் இன்றி வெளிநாடு போக வேண்டாம்! 24
வேலூரில் போலி பாஸ்போர்ட் 25
போலி பாஸ்போர்ட் வைத்திருந்த டிராவல் ஏஜெண்ட கைது! 26


## மேலும்...


போலி பாஸ்போர்ட்களை தடுக்க புதிய முறை! 27
"பாஸ்போர்ட்" பற்றிய சில குறிப்புகள் 29
மாலத்தீவில் வேலை வாய்ப்பா? தமிழக அரசு எச்சரிக்கை! 30
எந்தெந்த நாடுகளில் எத்தனை பேர் இந்தியர்கள் 31




படிப்பகம்

www.padippakam.com



# மலேசியாவில் தவிக்கும் 69 தமிழக இளைஞர்கள்

## மீட்கக்கோரி போலீஸ் கமிஷனரிடம் குடும்பத்தினர் குமுறல்

மலேசியாவில் வேலைக்கு சென்ற 63 தொழிலாளர்களை மீட்டுத்தாருங்கள் என்று அவர்களது குடும்பத்தினர் போலீஸ் கமிஷனர் அலுவலகத்தை முற்றுகையிட்டு புகார் செய்தனர்.

சென்னை தி.நகரில் உள்ள ஒரு தனியார் வேலை வாய்ப்பு நிறுவனம், மலேசியாவில் வேலை வேண்டுவோர் விண்ணப்பிக்கவும் என்று விளம்பரம் செய்து இருந்தது. இதனால் சூப்பர்வைசர், கூலித் தொழிலாளர்கள் உட்பட பல்வேறு பணிகளுக்காக ஏராளமானவர்கள் விண்ணப்பித்து இருந்தனர். இவர்களில் 63



மலேசியாவில் தவிக்கும் இளைஞர்களின் பெற்றோர் போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் கூடியிருந்த காட்சி.



படிப்பகம்

www.padippakam.com

**சம்பளம் கூட சரியாக கொடுக்காமல் இப்படி வேலை வாங்குகிறீர்களே என்று கேட்டவர்களை அடித்து மிரட்டி சித்ரவதை செய்தனர். அது மட்டுமல்ல வேலைக்கு சென்றவர்களின் பாஸ்போர்ட்டையும் வாங்கிக் கொண்டு கொலை செய்து விடுவதாக மிரட்டினர்.**

தொழிலாளர்களிடம் ரூ.1 லட்சம் முதல் ரூ.2 லட்சம் வரை வசூலித்து உள்ளனர். பிறகு அவர்களை அந்த தனியார் நிறுவனம் மலேசியாவுக்கு அனுப்பி வைத்தது.



தப்பி வந்த முருகானந்தம்

மலேசியாவிற்கு சென்ற 63 தொழிலாளர்களையும் மலேசிய நிறுவனம் ஒன்று துறைமுகத்தில் வேலைக்கு சென்றவர்களுக்கு சரியாக சாப்பாடு கூட கொடுக்காமல் எந்த நேரமும் வேலை செய்ய வேண்டும் என்று கெடுபிடி செய்தது. சம்பளம் கூட சரியாக கொடுக்காமல் இப்படி வேலை வாங்குகிறீர்களே என்று கேட்டவர்களை அடித்து மிரட்டி சித்ரவதை செய்தனர். அது மட்டுமல்ல வேலைக்கு சென்றவர்களின் பாஸ்போர்ட்டையும் வாங்கிக் கொண்டு கொலை செய்து விடுவதாக மிரட்டினர்.

இவ்வாறு சித்ரவதைக்கு உள்ளான தொழிலாளர்களில் 3 தொழிலாளர்கள் கொடுமைகளை டிஜிட்டல் காமிராவில் படம் எடுத்துக் கொண்டு சென்னைக்கு தப்பி வந்துள்ளனர். அவர்கள் உயிருக்கு பயந்து தலைமறைவாக இருந்தனர். அவர்கள் உடம்பில் அடிபட்ட காயங்கள் இருந்ததால் வடசென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றனர்.

இந்நிலையில் மலேசியாவில் வேலை பார்ப்பவர்கள் தங்களது பெற்றோருக்கு அங்குள்ள நிலைமைகளை சொல்லி கண்ணீர் கடிதம் எழுதி இருந்தனர். இதனால் வெளிநாட்டில் வேலைக்கு சென்றவர்களின் குடும்பத்தினர் மற்றும் ஏராளமான பெண்கள் போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு சென்று மத்திய குற்றப்பிரிவு போலீஸ் துணைக் கமிஷனர் கிருஷ்ணமூர்த்தியை சந்தித்து



படிப்பகம்

www.padippakam.com



தப்பிவந்த மகாலிங்கம்

புகார் மனு கொடுத்து முறையிட்டனர்.

இதைத்தொடர்ந்து போலீசார் மலேசியாவிற்கு வேலைக்கு அனுப்பி வைத்தவர்களில் 2 பேரை பிடித்து கமிஷனர் அலுவலகத்துக்கு அழைத்து வந்தனர். அதன் பிறகு அவர்களிடம் போலீசார் துருவித்துருவி விசாரித்த போது 'வேலைக்கு அனுப்புவதோடு எங்கள் பணி முடிந்து விட்டது. நாங்கள் யாருக்கும் வேலை கொடுக்காமல் ஏமாற்றவில்லை. ஆகையால் மலேசியாவில் நடந்தது எங்களுக்கு தெரியாது. அங்குள்ளவர்களிடம் விசாரித்தால் தான் தெரியும்' என்று கூறினர்.

உடனே போலீசார், உங்களுக்கு தெரியாமல் எதுவும் நடக்காது என்றுக் கூறி மலேசியாவிற்கு தகவல் கொடுத்து 63 தொழிலாளர்களையும் அழைத்துவர 20 நாள் அவகாசம் கொடுத்துள்ளனர்.

# கோலாலம்பூரில் வேலை வாய்ப்பு தகவல் மையம்

## வேலை தேடிச் செல்வோர் ஏமாற்றப்படுவதை தடுக்க மலேசிய அரசு ஏற்பாடு

வேலை தேடி மலேசியா செல்வோர் ஏமாற்றப்படுவதை தடுக்க கோலாலம்பூரில் வேலை வாய்ப்பு தகவல் மையம் துவக்கப்பட உள்ளதாக மலேசிய போக்குவரத்து மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோ சாமிவேலு தெரிவித்துள்ளார்.

திருப்பத்தூர் ஆ.பி.சீ.அ கல்லூரி தாளாளர் நா,ஆறு, நாகராஜன் இல்லத்திற்கு மரியாதை நிமித்தமாக வந்திருந்தபோது இதனை தெரிவித்தார்.

குறிப்பாக இந்தியர்கள் அதிகளவில் ஏராளமான பணத்தை அங்கீகாரம் பெறாத போலி ஏஜெண்டுகளிடம் கொடுத்து மலேசியாவில் வேலைக்குச் செல்கின்றனர்.பின்னர், அவர்கள் அனுமதியின்றி வந்தவர்கள் என்பதால் திருப்பி அனுப்பப்படுகின்றனர். இவ்வாறு மலேசியா வரும் தொழிலாளர்கள் ஏமாறுவதை தடுக்க கோலாலம்பூரில் வேலைவாய்ப்பு சம்பந்தப்பட்ட தகவல்மையம் தொடங்க மலேசிய அரசு திட்டமிட்டுள்ளது. இத்தகவல் மையம் மூலம் வேலைக்கு அனுப்புவதாக கூறும் ஏஜெண்டுகள் அங்கீகாரம் பெற்றவர்களா? வேலை தரும் நிறுவனம் தகுதியானதா? என்பது குறித்தத் தகவல்களை எவரும், எங்கிருந்தும் பெற முடியும் என்றும் தெரிவித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியக் கணிப்பொறியாளர்கள் 270 பேர் கைது!

கூடந்த மார்ச் மாதம் 11 ஆம் தேதியன்று மலேசிய தலைநகரான கோலாலம்பூரில் 270 இந்தியர்கள் கைது செய்யப்பட்டனர். பின்னர் தூதரகத்தின் தலையீடு காரணமாக அவர்கள் விடுதலை ஆனார்கள்.

மலேசியாவில் அனுமதியின்றி தங்கி இருப்போரை கண்டுபிடிக்க அந்நாட்டு போலீசார் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர். கோலாலம்பூரில் மையப்பகுதியில் அடுக்குமாடி கட்டிடம் ஒன்றில் சோதனையில் ஈடுபட்டனர். பின்னர் அங்கு இருந்த 270 இந்தியர்களை போலீசார் கைது செய்து போலீஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

கைதானவர்களில் பலர் கம்ப்யூட்டர் இன்சினியர்கள் ஆவார்கள். சிலர் பெண்கள் என்பதும் குறிப்பித்தக்கது. பாஸ்போர்ட் மற்றும் விசா ஆகியவற்றை முறையாக பெற்று சட்டப்படியாக தங்கியிருப்பதாக பலர் கூறிய போதும் போலீசார் கைது செய்த 270 இந்தியர்களிடம் முறையாக நடந்து கொள்ளவில்லை. போலீசார் பலரது செல்போன்களை பறித்துக் கொண்டு மேலும் சிலரை கைவிலங்கு போட்டு சட்டையை கழற்றி சித்ரவதையும் செய்தனர்.

இவ்வாறு திடீரென கைது செய்யப்பட்டு சித்ரவதை செய்யப்பட்ட 270 இந்தியர்களும் இந்திய தூதரக அதிகாரி திருமதி. வீனா சிக்ரி அவர்களின் தலையீட்டின் பேரில் விடுதலை செய்யப்பட்டனர்.

மலேசியாவில் 270 இந்தியர்கள் கைது செய்யப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டது தொடர்பாக மலேசிய அரசுக்கு இந்தியா தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது. டெல்லியில் உள்ள மலேசியத் தூதரக அதிகாரி சூசிகிவோ இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்திற்கு வரவழைக்கப்பட்டு மலேசியாவில் இந்தியர்களுக்கு எதிராக போலீசார் நடந்து கொண்ட செயலுக்கு இந்தியாவின் கண்டனம் அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

“போலீசாரால் தாக்கப்பட்ட இந்திய கம்ப்யூட்டர் இன்சினியர்களிடம் மலேசியாவின் பிரதமர் (தற்காலிக பிரதமர்) திரு.அப்துல்லா அகமது பத்வாய் அவர்கள் மன்னிப்பு கேட்க வேண்டும்” என மலேசிய எதிர்கட்சியான ஜனநாயக நடவடிக்கை கட்சியின் தலைவர் திரு. லிம்கிட் சியாங்க் வலியுறுத்தியுள்ளார். ●



படிப்பகம்

www.padippakam.com

# சம்பளம், உணவு கேட்டதால் தமிழகத் தொழிலாளர்கள் சித்திரவதை

மலேசியாவில் நல்ல சம்பளத்துடன் கூடிய வேலை இருப்பதாக கூறி போலி ஏஜண்டுகளால் அழைத்து வரப்பட்ட இரண்டு தமிழகத் தொழிலாளர்கள், அடித்து உதைக்கப்பட்டு , சித்ரவதை செய்யப்பட்டனர். சம்பளமில்லாமல் கொத்தடிமையாக நடத்தப்பட்ட அவர்கள் மலாக்காவுக்கு தப்பி வந்தனர்.

தமிழ்நாடு புதுக்கோட்டை மாவட்டம் பீனி கந்தா கிராமத்தை சேர்ந்த வெள்ளைச்சாமி த/பெ. லெட்சுமணன் (வயது 35), சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகேயுள்ள கண்டனூர் பாளையத்தை சேர்ந்த சேதுராமன் த/பெ. கருப்பண்ணன் (வயது 36) ஆகிய இருவரும் போலி ஏஜண்டுகளால் சுற்றுலா விசாவில் மலேசியாவிற்கு அழைத்து வரப்பட்டனர். மலேசியாவில் கிள்ளான் வட்டாரத்தில் ஒரு இந்திய நபரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். அந்நபர் சம்பளம் கொடுக்காமல் அவர்களை வேலை வாங்கியிருக்கிறார். அவர்களை கொத்தடிமைகள் போல் நடத்தி அடித்து உதைத்திருக்கிறார்.

அந்நபரிடம் இருந்து தப்பி ஓடி வந்து மலாக்கா மாநில ஆட்சிக்குழு மன்ற 'ஸ்ரீ நெகிரி' அலுவலகத்தில் மாநில முதல்வரின் சிறப்பு உதவியாளர் திரு. மகாதேவனை சந்தித்து



அடித்து நொறுக்கப்பட்ட தங்குமிடம்.



படிப்பகம்

www.padippakam.com

தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையை விவரித்தனர் அவ்விருவரும் வீட்டையும், நகைகளையும் விற்று மேலும் பிறரிடம் வட்டிக்கு பணம் வாங்கி 85 ஆயிரம் ரூபாயை சென்னையில் உள்ள ஏஜெண்டிடம் கொடுத்து விட்டு மலேசியா வந்தோம் என வெள்ளைச்சாமி கண்கலங்கியபடி கூறினார். எங்களை சென்னையிலிருந்து விமானத்தில் அழைத்து வந்த நபர் ஏர்போர்ட்டில் எங்களுக்காக காத்திருந்த நபர் ஒருவரிடம் விட்டு விட்டு தலைமறைவாகி விட்டார் என்று அவர் தெரிவித்தார்.

எங்களை அழைத்துச் சென்ற நபர் பந்திங், செந்திங் ஆகியோர் 11வது மைல் என்ற பகுதியில் உள்ள ஒரு வீட்டின் அறையில் 3 நாட்களாக அடைத்து வைத்து எங்களின் பாஸ்போர்ட்டுகளை பறித்துக்கொண்டு உங்களை நான் விலைக்கு வாங்கி உள்ளேன், தப்பி ஓட முயற்சித்தால் கையை வெட்டி விடுவேன் என மிரட்டியதாக அவர் கூறினார்.

கடந்த 1 மாதமாக செம்பனை பழம் பொறுக்கும் வேலையும் இதர வேலைகளையும் செய்யச்சொல்லி கட்டாயப்படுத்தப்பட்டோம். ஒரு காசு கூட எங்களுக்கு சம்பளமாக தரவில்லை. வேலை நேரத்தில் மதியம் 3 மணிக்கு மட்டுமே எங்களுக்கு முதலாளி சாப்பாடு தருவார். இரவில் உணவு கொடுக்கமாட்டார் என்று அவர் விவரித்தார்.

பசிக்கு சாப்பாடு கேட்டால் கன்னத்தில் அறைந்து, உதைப்பார் என சேதுராமன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். நாங்கள் தங்க வைக்கப்பட்டிருந்த வீட்டிலிருந்து இரவோடு இரவாக தப்பி பஸ் ஏறி மலாக்காவில் உள்ள எங்கள் நண்பரை சந்தித்து மலாக்கா மாநில முதல்வர் அலுவலகத்தில் புகார் செய்ததாக அவர் கூறினார். எங்கள் பாஸ்போர்ட்டை கொடுத்தால் போதும், நாங்கள் இருவரும் மீண்டும் இந்தியாவிற்கு போய் விடுவோம் என கண்கலங்கினர்.

இதனிடையே இது சம்பந்தமாக புகாரை பெற்றுக் கொண்ட மாநில முதல்வரின் சிறப்பு உதவியாளர் திரு. மகாதேவன் செய்தியாளர்களிடம் கூறுகையில் இவர்கள் மீண்டும் இந்தியாவுக்கு செல்ல மாநில குடி நுழைவுத்துறை அலுவலத்துடனும் இந்திய தூதரகத்திடமும் தொடர்பு கொண்டு முறையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இந்தியாவில் இருந்து இங்கு வேலை தேடி வருபவர்கள் அரசு அனுமதி பெற்ற நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு உண்மையான ஏஜெண்டுகளை அணுகுமாறும் அவர் ஆலோசனை கூறினார்.



படிப்பகம்

www.padippakam.com

மலேசிய மனித உரிமை ஆணையம் வேண்டுகோள்:

# கசையடி கொடுக்கும் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும்!

முறையான ஆவணங்கள் இல்லாமல் பணிபுரியும் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு தண்டனையாக கசையடி கொடுக்கும் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என மலேசிய அரசாங்கத்தை அந்நாட்டு மனித உரிமை ஆணையர் புரோபசர் முகம்மது ஹம்தான் அத்னான் கேட்டுக் கொண்டுள்ளார்.

சட்டவிரோதமான குடிநுழைவை தடுப்பதற்காக கடந்த வருடம் ஆகஸ்ட் 1 ம் தேதி முதல் மலேசியாவில் குடிநுழைவுச் சட்டங்கள் மிகக் கடுமையாக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் மலேசிய மனித உரிமை கமிஷனை சேர்ந்த 6 உறுப்பினர்கள் சிமென்யீத் என்ற சிறைக்கூடத்திலுள்ள 5 பகுதிகளை பார்வையிட்டனர். இங்கு 2000 க்கும் அதிகமான கைதிகள் மிகவும் வெப்பமான வசதியற்ற அறைகளில் கட்டுப்படுத்தப்பட்ட வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருந்தனர். இவர்களில் 825 பேர் இந்தோனேசியாவையும் 293 பேர் பர்மாவையும் 269 பேர் கம்போடியாவையும் 133 பேர் இந்தியாவையும் சேர்ந்தவர்களாவர்.

ஒவ்வொரு பகுதியும் 400 பேர் தங்கக்கூடிய அளவில் 5 வீடுகளை கொண்டதாகும். இதில் 4 வீடுகள் ஆண் கைதிகளுக்கும் 1 வீடு பெண் கைதிகளுக்கும் குழந்தைகளுக்கும்



மலேசியாவின் புகழ்பெற்ற இரட்டை கோபுரம்



படிப்பகம்

www.padippakam.com

ஒதுக்கப்பட்டிருக்கும்.

'தொடர்ந்து குடிநுழைவுத்துறை அதிகாரிகளாலும் காவல் துறையினராலும் இரவு நேரங்களிலும் சோதனை நடத்தப்படுவதால் பிடிபடும் பெண் கைதிகள் எண்ணிக்கை அதிகமாகிறது. எனவே பெண் கைதிகளையும் ஆண் கைதிகள் இருக்கும் இடங்களிலேயே அடைக்கின்றனர்' என ஹம்தான் கூறினார்.

கைதிகள் தங்கள் பின்புறங்களில் அடிபட்ட காயத்துடனோ தழும்புடனோ சிமெண்ட் தரையில் உட்கார்ந்து அல்லது படுத்துக் கொண்டு இருந்ததாகவும் ஹம்தான் கூறினார்.

இவ்வாறு கைது செய்யப் பட்டிருக்கும் வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு தேவையான பயண ஏற்பாடுகள் அந்தந்த நாட்டு தூதரகங்கள் மூலம் செய்யப்பட்டு வருவதால் கைதிகள் அவர்கள் நாட்டிற்கு திரும்பிச் செல்ல ஒரு வருடத்திற்கும் மேல் காலதாமதமாகிறது. அதுவரை கைது செய்யப்பட்ட தொழிலாளர்கள் சிறைகளிலேயே இருக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது என ஹம்தான் கூறுகிறார்.

அந்தந்த நாட்டு தூதரகங்கள் தங்கள் நாட்டு தொழிலாளர்களை மீட்டு திருப்பி அனுப்பி வைப்பதிலேயே அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் ஹம்தான் கேட்டுக் கொண்டுள்ளார்.

பெரும்பாலான வெளிநாட்டுத் தொழிலாளர்கள் முறையான அனுமதி மற்றும் முறையான பயணத்திற்கான ஆவணங்கள் இல்லாத காரணத்தாலேயே சிறை பிடிக்கப்பட்டனர் என்று மலேசிய மனித உரிமை கமிஷனின் செயலாளர் கம்ருதீன் முகம்மது பாரியா தெரிவித்தார்.

சிமென்யீத் சிறையில் உள்ள வெளிநாட்டுத் தொழிலாளர்களுடைய முறையான ஆவணங்களை அவர்களுடைய முதலாளிகள் சமர்பிக்கும் வரை கைதிகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் கம்ருதீன் கூறினார்.

இருந்தாலும் வெளிநாட்டுத் தொழிலாளர்களை அவர்களுடைய சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்புவதில் காலதாமதம் இல்லாமல் செயல்பட முயற்சி செய்வதாகவும், சம்பந்தப்பட்ட தூதரகங்களுக்கு விரைவில் பயணத்திற்கான ஆவணங்களை ஏற்படுத்தித் தர கோரியும் கடிதங்கள் அனுப்பப்பட இருக்கின்றன என்றும் கம்ருதின் கூறினார். ●



படிப்பகம்

www.padippakam.com

# மலேசியாவுக்குக் கடத்தப்படும் பெண்கள்

இளம் பெண்கள் கடத்தப்பட்டு கொண்டுவரப்படும் இடமாக மலேசியா மாறி வருகிறது. கடத்தப்படும் பெண்களில் பெரும்பாலானோர் குத்தகை முறையில் சட்டப்படியாக தொழிலாளர்களாகவும், சுற்றுலா பயணிகளாகவும் வெளிநாட்டு மாணவர்களாகவுமே தொடர்ந்து மலேசியாவிற்கு கொண்டு வரப்படுகின்றனர்.

கடந்த 3 ஆண்டுகளில் மலேசிய காவல்துறையினர் அயல்நாட்டு மாணவர்களும் சுற்றுலா பயணிகளும் அடங்கிய 13000 நபர்களை பல்வேறு காரணங்களுக்காக கைது செய்துள்ளனர்.

இது போன்று கடத்தப்பட்டு பாலியல் தொழிலுக்கு ஈடுபடுத்தப்படும் பெண்களும் இளம் பெண்களும் இந்தோனேசியா, தாய்லாந்து, தைவான், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், கம்போடியா, சீனா, ரஸ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பா நாடுகளிலிருந்து கடத்தி வரப்படுகின்றனர்.

அதிக சம்பளம் சம்பாதிக்கலாம் என்ற ஆசைவார்த்தைக்கு மயங்கி மலேசியாவிற்கு வரும் பெரும்பாலான பெண்கள் பாலியல் தொழிலுக்கு தள்ளப்படுகிறார்கள். இவர்களிடமிருந்து இவர்களுடைய பாஸ்போர்ட்கள் பறித்துக்கொள்ளப்படுவதால் இவர்களால் தப்பிக்கவும் முடியவில்லை.

ஏழை பெண்கள், தனியாக அல்லது கணவனிடமிருந்து பிரிந்து வாழ்கின்ற பெண்கள், கல்வியறிவு இல்லாதவர்கள் மற்றும் கிராமங்களில் உள்ள பெண்களே குறிவைத்து கடத்தப்படுகின்றனர் என சர்வதேச பெண் வழக்கறிஞர்களின் அமைப்பின் தலைவி சரஸ்வதிதேவி தெரிவித்தார். இவர்கள் பெரும்பாலும் இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, சீனா, மியான்மர் (பர்மா) மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளிலுள்ள கிராமங்களிலிருந்தே அழைத்து வரப்படுகின்றனர்.

ஏஜெண்டுகள் மலேசியா சென்ற பின் நல்ல வேலை பெற்று மாதச் சம்பளமாக மலேசிய ரிங்கட் 1000 பெறலாம் என இவர்களுடைய பெற்றோர்களிடம் கூறி அழைத்து வருகின்றனர்.

இது போன்று பெண்கள் அதிகளவில் கடத்தப்பட்டு



படிப்பகம்

www.padippakam.com

மலேசியாவில் பாலியல் தொழிலுக்கு ஈடுபடுத்தப்படுவதை கண்டித்து முன்னாள் உச்ச நீதி மன்ற நீதிபதி திரு. ஹருன் ஹாகிம் இது சம்மந்தமாக காவல்துறையினர் நடவடிக்கை அதிகம் தேவை என குறிப்பிட்டார். மேலும் பாலியல் தொழில் அதிகமாக நடைபெறும் இடங்களில் காவல்துறையினர் தொடர்ந்து திடீர் சோதனையில் ஈடுபடவேண்டும் என்றும் தெரிவித்தார்.

மலேசிய நாட்டு சட்டப்படி பெண்களை கடத்தும் தொழிலில் ஈடுபடும் தனிநபர்கள் ஒவ்வொருவருக்கும் 10,000 மலேசிய ரிங்கட் முதல் 50,000 மலேசிய ரிங்கட் வரை அபராதம் விதிக்கவும் 2 முதல் 5 வருடங்கள் வரை சிறை தண்டனையும் 6 முறை சவுக்கடி கொடுக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பெண்களை கடத்தும் கும்பல் 4 அல்லது 5 நிலைகளில் செயல்படுவதால் அவர்களை நீதிமன்றத்தில் நிறுத்துவது கடினமாக உள்ளது என காவல்துறையினர் தரப்பில் கூறப்படுகிறது.

பெண்களை வேலைக்கு அழைத்து செல்லும் ஏஜென்டுகள் மலேசியா அழைத்துச்செல்ல வேறு ஏஜென்டுகளிடம் மாற்றப்படுகின்றனர். வேறு ஏஜென்டுகள் மூலமாக மலேசியா செல்லும் பெண்கள் மற்றொரு ஏஜென்டு மூலமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என சர்வதேச பெண் வழக்கறிஞர் அமைப்பின் தலைவி சரஸ்வதி தெரிவித்தார்.



மலேசியாவுக்குக் கடத்தப்படும் பெண்கள்

பெண்கள் நிவாரண அமைப்பின் சட்ட அலுவலர் லீ ஹீக்ஃபோங் கூறுகையில் பெரும்பாலான பாதிக்கப்பட்ட பெண்கள் நீதி மன்றங்களுக்கு இவ்வழக்கு சம்மந்தமாக வருவதற்கே பயப்படுகின்றனர் என்று கூறினார்.

இது போன்று பெண்கள் கடத்தப்பட்டு பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதை தடுக்க தொழிலாளர்களை அனுப்பும் நாடுகளும் தொழிலாளர்களை பணிக்கு அழைத்துச் செல்லும் நாடுகளும் சேர்ந்து இவர்களுக்கு உதவ தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என லீ மற்றும் ஹாரூன் கேட்டுக்கொண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

# 20 ஆயிரம் இந்தியர்களுக்கு மலேசியாவில் வேலை வாய்ப்பு!

மலேசியாவில் தமிழ் பேசும் இந்தியர்கள் மளிகைக்கடை, மினி சூப்பர் மார்க்கெட் நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு கடையை நடத்த ஊழியர்கள், மாற்றுத் தொழிலாளர்கள் கிடைப்பதில்லை. அதனால் இந்தியாவிலிருந்து ஊழியர்களையும் சிப்பந்திகளையும் அழைத்து வருவதற்கு அனுமதி வேண்டும் என்று மலேசிய அரசாங்கத்திடம் கேட்டு வந்தனர். மளிகைக்கடை, சூப்பர் மார்க்கெட் ஆகியவற்றில் பணியாற்ற தென்இந்தியர்கள் 20 ஆயிரம் பேரை அழைத்துக் கொள்வதற்கு மலேசிய மந்திரி சபை அனுமதி அளித்துள்ளது. மேற்கண்ட தகவலை கோலாலம்பூர் மூஸ்லீம் ஒட்டல் அதிபர்கள் கூட்டத்தில் பேசிய மலேசிய மந்திரி டத்தோ சாமிவேலு தெரிவித்தார்.

மேலும் அவர் கூறும்போது இந்தியாவை பூர்வீகமாக கொண்ட தமிழர்கள் மலேசியாவில் மளிகைக்கடை, சூப்பர் மார்க்கெட் நடத்தி வருகிறார்கள். கடையில் வாடிக்கையாளர்கள் வாங்கும் பொருட்களை அவர்களுடைய வீடுகளுக்கு கொண்டு செல்கின்றனர். ஆனால் அவர்களுக்கு உதவிசெய்ய சிப்பந்திகள் கிடைப்பதில்லை. அவர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று 20 ஆயிரம் ஊழியர்களை இந்தியாவிலிருந்து அழைத்துக் கொள்ள மலேசிய மந்திரிசபை அனுமதித்துள்ளது. இந்திய ஊழியர்களை மலேசியாவிற்கு அழைத்து கொள்வதற்கு உரிய ஏற்பாடுகளை செய்ய இன்னும் 3 மாத காலம் அவகாசம் தேவை என மலேசிய அமைச்சர் டத்தோ சாமிவேலு குறிப்பிட்டார். ●

**நன்றி**

கடல் கடந்த தொழிலாளி- இதழ் 4 ல் உள்ள செய்திகளை மே 2003 இதழில் வெளியிட்டு மலேசியாவில் உள்ள தமிழ்த் தொழிலாளர்களை சென்றடையச் செய்த 'இதயம்' மலேசிய தமிழ். இதழின் ஆசிரியர் திரு. துரைராஜ் அவர்களுக்கும்

13.04.2003 அன்று தமது 'வசந்தம்' ஞாயிறு இதழில் சிற்றிதழில் என்ன இருக்கு? என்ற தலைப்பில் கடல்கடந்த தொழிலாளி இதழ் -4 ஐ பற்றி வெளியிட்டு தமிழ் மக்கள் அனைவரையும் சென்றடையச் செய்த தினகரன் தமிழ் நாளிதழுக்கும் அமைதி அறக்கட்டளையின் குடிபெயர் தொழிலாளர் உரிமை மையம் சார்பில் நன்றியினை தெரிவித்து கொள்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

தூரம்:

# நட்சத்திரக் கலைவிழா தேவையா?

அண்மையில் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்க நிதிக்காக துபாயிலும் இலண்டனிலும் தமிழ்த் திரைப்பட நட்சத்திரங்கள் பங்கேற்ற நட்சத்திரக் கலைவிழாக்கள் நடத்தப்பட்டன. இதற்கு இலண்டன் வாழ் ஈழத்தமிழர் அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் துபாயைச் சேர்ந்த துவக்கு என்ற இலக்கிய அமைப்பைச் சேர்ந்தவர்களும் கடும் கண்டனத்தை தெரிவித்து உள்ளனர். அவர்கள் இணையத்தில் வெளியிட்ட எதிர்ப்பு சுவரொட்டி இது.

## சிந்திப்பீர்?



**குருதியை உருக்கி வியர்வையாய் வடிக்கும்**
**தமிழ்ப் பாட்டாளிகளே!**



விசாவுக்காக வாங்கிய கடனையும்
அடைக்க முடியாத நம்மில் பலருக்கு
உதவப்போவது யார்?
விமானச்சீட்டுக்காக அடமானம்
வைத்த வீட்டை மீட்கப்போவது யார்?
சோற்றுக்கும் வழியின்றி வாடும் நம்
குடும்பங்களுக்கு மாத செலவுக்கு
பணம் அனுப்புவது யார்?
சோனாப்பூரிலும்,அல்கூஸ்ஸிலும் பணியாளர்
முகாம்களில் வாடும் நம்மைப் பற்றி
கவலைப்படப்போவது யார்?
சுமைத்தூக்குபவர்களாகவும், சாலை,தெரு
சுத்தம் செய்பவர்களாகவும், கட்டிட
பணியாளர்களாகவும் குருதிக்கண்ணீர்
வடிக்கும் நமக்கு உதவப்போவது யார்?





**உழைக்கும் தமிழினமே**
**நம் குடும்ப சூழல் நினைத்துப்பார்**
**நட்சத்திர கலைவிழா தவிர்**

**துவக்கு இலக்கிய அமைப்பு**



படிப்பகம்

www.padippakam.com

# பொதுமன்னிப்பில் நாடுதிரும்பத் தயாரான இந்தியர்கள்

பொது மன்னிப்பில் நாடு திரும்ப ஏராளமான இந்தியர்கள் துபாயில் உள்ள இந்திய தூதரக அலுவலகத்தில் வரிசையாக நின்று இருந்தனர். பொது மன்னிப்பில் இந்தியா திரும்ப நினைக்கும் தொழிலாளர்களுக்கு விண்ணப்பங்களை பூர்த்தி செய்து கொடுப்பதற்காக 10க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

துபாயில் தலைமறைவாக இருந்த தொழிலாளர்களில் பெரும்பாலானோர் பொதுமன்னிப்பு காலத்திலேயே தங்கள் தாய்நாட்டிற்கு திரும்ப நினைத்தவர்களுக்கு அது சம்பந்தமாக ஆவணங்களை தயாரிப்பதில் குழப்பம் ஏற்படும் என்பதற்காக 10 க்கும் மேற்பட்ட தன்னார்வலர்களை இந்திய தூதரக அதிகாரிகள் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பொது மன்னிப்புக்கான ஆவணங்களை தயார் செய்ய சிறு பயிற்சியும் அளிக்கப்பட்டு இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். குஜராத்தி, மலையாளம், தமிழ் மற்றும் தெலுங்கு முதலிய மாநில மொழிகள் தெரிந்த தன்னார்வலர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கடந்த 10-03-2003 வரை துபாய் மற்றும் சார்ஜாவிலிருந்து 6000 இந்திய தொழிலாளர்கள் பொது மன்னிப்பில் இந்தியா செல்வதற்காக தங்கள் பாஸ்போர்ட்களை சமர்ப்பித்துள்ளனர்.




இவ்வாறு பெறப்பட்ட பாஸ்போர்ட்டிலுள்ள பெயர்கள் மற்றும் பாஸ்போர்ட் நம்பர்கள் ஒரு பதிவேட்டில் குறித்து வைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலானோர் சார்ஜா இந்தியர் கூட்டமைப்பு மற்றும் கேரள முஸ்லீம்



படிப்பகம்

www.padippakam.com

கலை மன்றம் சார்பிலேயே அனுப்பப்பட்டனர்.

பொதுமன்னிப்பு கோரி வரும் சில இந்திய தொழிலாளர்களிடம் பாஸ்போர்ட், டிரைவிங் லைசென்ஸ், தொழிலாளர் அட்டை மற்றும் உடல்நல தகுதி சான்றோ அல்லது அவற்றின் நகல்களோ இல்லை.

சில சமயங்களில் அந்த தொழிலாளர்கள் இந்தியர்கள் தான் என்பதற்கு சான்றாக ஏதேனும் சான்றிதழை இந்தியாவிலிருந்து பெற்று சமர்பிக்கும்படி கூறி வருகிறோம் என்று தூதரக அதிகாரிகள் கூறுகின்றனர்.

மேலும் சில தொழிலாளர்கள் தனியாக வருவதில்லை. தங்களுடன் 2 அல்லது 3 நண்பர்களை உத்திரவாதம் அளிப்பதற்காக அழைத்து வருகின்றனர். ஆனால் அவ்வாறு உத்திரவாதம் அளிக்க நபர்கள் தேவை இல்லை என தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சில சமயங்களில் தொழிலாளர்கள் எவ்வளவு பொருட்கள் எடுத்துச் செல்லலாம் என்று கேட்கின்றனர். பொது மன்னிப்பை தவறாக பயன்படுத்த நினைத்தனர் என தூதரக அதிகாரிகள் கூறினர்.

எடுத்துக்காட்டாக போதிய ஆவணங்கள் இல்லாமல் கடந்த 4 வருடங்களாக பணியாற்றிய ரஞ்சித்சிங் அவர் இந்தியா திரும்ப தேவையான ஆவணங்களை அவரிடம் கொடுப்பதற்காக அவருடைய பாஸ்போர்ட் தேவைபட்டது. அதற்கு அவர் தற்போது பகுதி நேரப்பணியாளராக கட்டிட பணிகள் செய்து வருவதாகவும் தான் 4 வருடங்களுக்கு முன்பாக துபாய் வந்ததாகவும் அலுமினியம் கம்பெனி ஒன்றில் வேலை கிடைத்ததாகவும் ஆனால் வேலை செய்வதற்காக விசா, உடல் தகுதி சான்று, தொழிலாளர் அட்டை பெறவில்லை என்றும் எனவே அக்கம்பெனியிலிருந்து சென்று தலைமறைவாக இருந்தேன் என்றும் கூறினார். மேலும் பொது மன்னிப்பு பற்றி கேள்வி பட்டவுடன் தான் இந்தியாவில் உள்ள தன் உறவினர்களை தொடர்பு கொண்டு பேக்ஸ் மூலம் தன்னுடைய பாஸ்போர்ட் நகலை பெற்றதாகவும் அவ்வாறு பெறப்பட்ட நகல் தெளிவாக படிக்கும்படி இல்லாததால் என்னை நம்ப மறுக்கின்றனர் என்றும் நான் இந்தியா செல்ல ஆசைப்படுவதாகவும் அத்தொழிலாளி கூறினார்.

இதே போன்று பலதரப்பட்ட தொழிலாளர்களை இந்தியாவிற்கு அனுப்பிக் கொண்டு இருக்கின்றோம் என தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# முதலாளிக்கு எதிராக 65 தொழிலாளர்கள் வழக்கு!

துபாயில் உள்ள கப்பல் பழுது பார்க்கும் கம்பெனியில் பணிபுரியும் 65 தொழிலாளர்கள் தங்கள் முதலாளிக்கு எதிராக கடந்த 11 மாதங்களாக சம்பளம் பெறவில்லை என சமூக நலத்துறை மற்றும் தொழிலாளர் அமைச்சகத்தில் வழக்கு ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

கடந்த 17-02-2003 அன்று முதல் பணிபுரிய செல்ல மறுத்த 65 தொழிலாளர்களும் துபாய் காவல்துறையினர் உதவியுடன் சமூக நலத்துறை மற்றும் தொழிலாளர் அமைச்சகத்திற்கு சென்று வழக்கு பதிவு செய்துள்ளனர். இவ்வழக்கு தொழிலாளர் நலத்துறை பிரிவு மூலம் விசாரணை செய்யப்படும் என அமைச்சகத்திலிருந்து கூறப்பட்டது.

65 தொழிலாளர்களும் பதிவு செய்த வழக்குப்படி ஒவ்வொரு தொழிலாளருக்கும் 30,000 திர்காம் வரை சம்பள பாக்கி உள்ளதாகவும் இதற்கு முன்னர் கடந்த மார்ச் '2002 மாத சம்பளத்தையே கடைசியாக பெற்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சமூக நலத்துறை மற்றும் தொழிலாளர் அமைச்சகம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் பணிபுரியும் கம்பெனியின் மேலாளரை இது சம்மந்தமாக தொடர்பு கொண்டு மேலும் ஒரு தொழிலாளர் ஆய்வாளரை பிரச்சனையை சுமூகமாக தீர்த்து வைக்கும்படியும் அனுப்பி வைத்தது. கம்பெனியின் மேலாளரும் குறுகிய காலத்திற்குள் அனைவருக்கும் சம்பளப் பணம் கொடுக்கப்பட்டு விடும் என தெரிவித்தார்.

தொழிலாளர்கள் ஏற்கனவே துபாய் நீதி மன்றத்தில் வழக்கு பதிவு செய்துள்ளதால் வழக்கு விசாரணைக்கு வரும் முன்னரே இவ்வழக்கு சுமூகமாக தீர்த்து வைக்கப்படும் என்றும் தொழிலாளர்களுக்கு சம்பளம் தாமதமாவது பெரும்பாலும் தடுத்து நிறுத்தப்படுகிறது எனவும் சமூக நலத்துறை மற்றும் தொழிலாளர் அமைச்சகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டது.

தொழிலாளர்கள் அவர்களுடைய உரிமைகளை பெறுவதற்காக தெருக்களிலோ அல்லது அரசாங்க அலுவலகங்களுக்கு முன்னாலேயோ நிற்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றும் தொழிலாளர்கள் அவர்கள் பணிபுரியும் கம்பெனி மூலம்



படிப்பகம்

www.padippakam.com

# மலேசிய நீதிபதி கண்டனம்!

மலேசிய உயர்நீதி மன்ற நீதிபதி நாதன் இந்தியாவில் உள்ள அயல் நாடுகளுக்கு தொழிலாளர்களை அனுப்பும் வேலைவாய்ப்பு நிறுவனங்களுக்கும் அவற்றின் முகவர்களுக்கும் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார். 52 இந்தியத் தொழிலாளர்கள் தங்களது முதலாளிக்கு எதிராக ஒப்பந்தத்தை மீறியதாக தொடரப்பட்ட வழக்கின் விசாரணையின் போது தன் கண்டனத்தை நீதிபதி நாதன் வெளியிட்டார்.

இவ்வழக்கின் விசாரணையின்போது இந்திய தொழிலாளர்கள் சார்பாக சம்பத்குமார், வெள்ளிங்கிரி ஆகியோர் கூறும்போது தொழிலாளர்கள் ஒப்பந்தத்தின்படி மாதச்சம்பளமாக மலேசிய ரிங்கெட் 600 பெறவில்லை என்றும் 350 மலேசிய ரிங்கெட் தான் சம்பளமாக பெற்றோம் என்றும் கூறினர். மேலும் தினமும் 8 மணி நேர கட்டாய பணி நேரம் போக கூடுதலாக 5 மணி முதல் 7 மணி நேரம் வரை கூடுதல் பணி செய்ய தங்கள் கம்பெனியான 'சின் வெல் பாஸ்டன்னர்ஸ்' நிர்பந்தித்தது என்றும் கூறினர்.

மேற்கண்ட 52 தொழிலாளர்களை அழைத்துச் சென்ற அமர்ஜீத்சிங் என்ற ஏஜென்ட் கூறும் போது 52 தொழிலாளர்களையும் இந்தியாவில் உள்ள மிதுன் டிராவல்ஸ் என்ற ஏஜென்ஸி மூலம் அழைத்து வந்ததாகவும் ஒவ்வொருவரிட மிருந்தும் ரூ.45,000/- மட்டும் பெற்றுக் கொண்டேன் என்றும் இத்தொகை விளம்பரச் செலவுகளுக்கு பயன்படுத்தப் பட்டது என்றும் இவ்விவரம் தொழிலாளர்களுக்கும் தெரியும் என்று குறிப்பிட்டார். பாதிக்கப்பட்ட 52 தொழிலாளர்களும் இவ்வழக்கு மூலம் தலா 12,000 மலேசிய ரிங்கட் வேண்டும் என வழக்கு தொடர்ந்துள்ளனர். ஒப்பந்தத்தின்படி அனைத்தும் இனிவரும் காலங்களில் கொடுப்போம் என 'சின்வெல் பாஸ்டனர்ஸ்' கம்பெனி தெரிவித்துள்ளது என மலேசிய உயர்நீதி மன்ற நீதிபதி நாதன் குறிப்பிட்டார்.

ஏதாவது பிரச்சனைக்கு உட்படுத்தப்பட்டால் உடனடியாக அமைச்சகத்திற்கு தெரிவிக்க வேண்டும் என்றும் அமைச்சகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கும் விதமாக ஒவ்வொரு கம்பெனியிலிருந்து தொழிலாளர்களுக்கு சம்பளம் சரியாக கொடுக்கப்படுகிறதா என்பது பற்றிய தகவல்கள் அக்கம்பெனியிலிருந்து பெறப்படும் என்றும் இத்தகவல்கள் அக்கம்பெனியில் பணிபுரியும் தொழிலாளர்களால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் இது கூடிய விரைவில் செயல்பாட்டிற்கு வரும் என்றும் அமைச்சகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டது. மேலும் அனைத்து கம்பெனிகளிலும் பணிபுரியும் தொழிலாளர்கள் பற்றியும் அவர்களுடைய தொழிலாளர் அட்டை உட்பட பல தகவல்கள் ஏற்கனவே சேகரிக்கப்பட்டு விட்டன என்றும் அமைச்சகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. •



படிப்பகம்

www.padippakam.com

# 52 இந்தியத் தொழிலாளர்களுக்கும் சாதகமானது தீர்ப்பு!

இந்தியாவிலிருந்து மலேசியாவிற்கு சென்ற 52 தொழிலாளர்களுக்கு சேரவேண்டிய முழு சம்பளத்தையும் தருமாறு மலேசிய உயர்நீதிமன்ற நீதிபதி திரு.கமலநாதன் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாடு, கேரளா மற்றும் ஆந்திராவை சேர்ந்த தொழிலாளர்கள் மிதுன் டிராவல்ஸ் மூலமாக மலேசியாவில் உள்ள சின்வெல் பாஸ்டனர்ஸ் என்ற கம்பெனிக்கு பணி செய்வதற்காக ரூ.1 லட்சம் வரை கடன் வாங்கி கொடுத்து சென்றுள்ளனர்.

மலேசியா சென்ற தொழிலாளர்களுக்கு மாதம் ரூ.10,000 வரை சம்பளம் கிடைக்கும் என்று கூறப்பட்டது. ஆனால் அவர்கள் மாதந்தோறும் பெற்ற சம்பளமோ ரூ.4,600 மட்டும்தான். பாதிக்கப்பட்ட 52 தொழிலாளர்களும் இதனை எதிர்த்து மலேசியாவில். உள்ள பினாங்கு பயனீட்டாளர் சங்கத்தின் உதவியுடன் பினாங்கில் உள்ள உயர்நீதி மன்றத்தில் தாங்கள் பணிபுரியும் கம்பெனிக்கு எதிராக வழக்கு தொடர்ந்தனர்.

இவ்வழக்கினை விசாரித்த நீதிபதி திரு.கமலநாதன் ரத்தினம் தனது தீர்ப்பில் சின்வெல்பாஸ்டனர்ஸ் கம்பெனி ஏற்கனவே அளித்த வாக்குறுதிப்படி மாதம் ரூ.10,000 சம்பளம் கொடுக்கவேண்டும் என்றும் மேலும் அவர்கள் மலேசியாவிற்கு வந்து செல்வதற்கு ஏஜெண்டிடம் கொடுத்த ரூ.45,000 மற்றும் வழக்கு செலவுத் தொகை ஆகியவற்றை ஒரு வார காலத்திற்குள் தரும்படி உத்தரவிட்டார்.

இவ்வழக்கில் தொழிலாளர்களுக்கு ஆதரவாக வாதாடிய வழக்கறிஞர் திரு.மொகிதீன் காதர் தற்போது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு நல்ல தீர்ப்பாகும். இத்தீர்ப்பு எதிர்காலத்தில் இதுபோன்ற வழக்குகளுக்கு முன் உதாரணமாக இருக்கும் என்றார். ●



பினாங்கு பயனீட்டாளர் சங்கத் தலைவர் முகமது இத்ரிசுடன் தொழிலாளர்கள்



படிப்பகம்

www.padippakam.com

மாலத்தீவு:

# சிறைப்பட்டுள்ள தமிழர்களை மீட்க சுதர்சன நாச்சியப்பன் எம்.பி. முயற்சி!

மாலத்தீவு சிறையில் உள்ள தமிழ்க் கைதிகள் பிரச்சனை தொடர்பாக மாலத்தீவிற்கு நேரில் சென்று அங்குள்ள அதிகாரிகளை சந்தித்து பேச திட்டமிட்டு இருப்பதாக சிவகங்கை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சுதர்சன் நாச்சியப்பன் கூறியுள்ளார்.



சுதர்சன் நாச்சியப்பன்

தமிழகத்திலிருந்து மாலத்தீவிற்கு வேலை தேடிச் சென்றவர்கள் பலர் அங்குள்ள சிறைகளில் கைதிகளாக அடைக்கப்பட்டு சித்ரவதைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அங்குள்ள சிறையில் கைதியாக அடைக்கப்பட்டுள்ள முகம்மது அலி என்பவர் பற்றிய செய்திகள் இந்தியன் எக்ஸ்பிரஸ் (ஆங்கில நாளிதழ்) மற்றும் தீக்கதிர் ஆகிய நாளேடுகளில் வெளியிடப்பட்டிருந்தன.

இந்நிலையில் மாலத்தீவு சிறைகளில் உள்ள இந்தியத் தொழிலாளர்களை விடுவிப்பது சம்பந்தமாக மாலத்தீவிற்கு நேரில் சென்று அங்குள்ள அதிகாரிகளை சந்தித்து பேச இருப்பதாக சிவகங்கை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சுதர்சன் நாச்சியப்பன் கூறியுள்ளார். அவர், தனது தொகுதியான சிவகங்கையிலிருந்து மாலத்தீவு சென்றுள்ளவர்கள் பலர் மாலத்தீவு சிறையில் உள்ளனர் என்றும் கூறியுள்ளார்.

இதுத்தொடர்பாக மத்திய வெளிவிவகாரத்துறை அமைச்சகம், மாலத்தீவில் உள்ள இந்திய தூதரகங்களுக்கு அவர் எழுதிய கடிதங்களுக்கு எந்த முறையான பதிலும் கிடைக்கவில்லை என்றும் எனவே தேசிய மனித உரிமை கமிஷனுக்கு இது தொடர்பாக புகார் கடிதம் எழுதியதாகவும் தெரிவித்தார். அவருடைய இந்த அனைத்து முயற்சிகளுக்கும் எந்த பயனுமில்லாமல் போனதால் மாலத்தீவு சென்று அங்குள்ள அதிகாரிகளை நேரில் சந்தித்து பேச திட்டமிட்டு இருப்பதாக கூறினார். ●



படிப்பகம்

www.padippakam.com


<u>அபுதாபி:</u>

# சட்டவிரோதக் குடியேறிகளுக்கு புகலிடமா ஐக்கிய அரபு எமிரேட் நாடுகள்?

ஆசிய நாட்டவர்கள் வறுமை, அரசியல் மற்றும் சமூக கலவரங்களால் அவர்களுடைய பிரச்னைகளை தீர்ப்பதற்கும் பணம் சம்பாதிக்கவும் எண்ணை வளம் மிகுந்த வளைகுடா நாடுகளுக்கு குடிபெயர்கின்றனர். பல காரணங்களுக்காக வளைகுடா நாடுகளிலேயே ஐக்கிய அரபு எமிரேட் நாடுகளையே தேர்ந்தெடுத்து குடிபெயருகின்றனர். பெரும்பாலான மண்டல எண்ணெய் உற்பத்தியாளர்கள் ஆசிய நாடுகளிலிருந்து வந்த சட்ட விரோதமான குடிபெயர் தொழிலாளர்களையே பணிக்கு அமர்த்தியுள்ளனர்.

ஐக்கிய அரபு எமிரேட் நாடுகள் தான் முன்னேறும் நாடுகளிலேயே பொருளாதார பிரச்சனையால் பாதிக்கப்படாத நாடுகளாகும். கடந்த சில வருடங்களாக 7 சதவீத மக்கள் தொகை வளர்ச்சி பெற்ற இந்நாடு உலகிலேயே அதிகளவு வருவாய் ஈட்டும் நாடுகளில் ஒன்றாக UAE திகழ்கிறது. கடந்த 2001 ம் ஆண்டில் 71,200 Dh ($ 19,400) வருவாய் ஈட்டியுள்ளது. நடப்பாண்டில் 73,200 Dh ($ 19,950) வருவாய் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு உள்ள அதிக வருவாய் இந்நாடுகளில் எண்ணெய் வளம் உற்பத்தி செய்வது நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையே காட்டுகிறது.

உலகிலேயே UAE தான் குறைந்த அளவு வேலையற்றோரை கொண்ட நாடாகும். 2001 ஆம் ஆண்டு வேலையற்றோர் விகிதம் 2.3% ஆகும். உண்மையாக பார்ப்போமேயானால் இந்நாட்டில் உள்ள சட்ட விரோத குடியேறிகள் அலுவலக விதிமுறைகள்படி ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத காரணத்தால் வேலையற்றோர் வீதம் அதிகரிக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.




சட்ட விரோதமாக குடியேறும் தொழிலாளர்கள் தொழிலாளர் சட்டங்களை மீறி வேலை



படிப்பகம்

www.padippakam.com

தேடிக்கொள்கின்றனர் என்றும் நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்து விரிவடைந்து வருவதால் நாட்டில் அதிக வேலை வாய்ப்புகள் உள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவிக்கிறது.

இவ்வாறு சட்ட விரோதமாக குடியேறி வேலைதேடி பின்னர் நல்ல நிலைக்கு வந்ததை அவர்களுடைய உறவினர் கேள்விபட்டவுடன் அவர்களும் சட்டவிரோதமாக குடியேறி வேலை தேட ஆரம்பிக்கின்றனர் என்று அமைச்சகம் தன் கருத்தை தெரிவிக்கிறது.

பொருளாதார காரணங்களால் மட்டுமல்ல. UAE கருத்து சுதந்திரம் அளிக்கக்கூடிய, மன்னிக்கக்கூடிய தன்மையுள்ள நாடு என ஈரான், இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் பங்களாதேஷ் முதலிய நாடுகளிலிருந்து சட்ட விரோதமாக குடியேறியுள்ள தொழிலாளர்கள் நம்புகின்றனர்.

பொது மன்னிப்பின் போது UAEயிலிருந்து வெளியேறி இலங்கைக்கு திரும்பியுள்ள தொழிலாளர் ஒருவர் நான் UAE தவிர வேறு நாடுகளுக்கு செல்ல மாட்டேன் என்றும் மற்ற நாடுகளில் அதிக வேலை செய்து மேலும் பட்டினியாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

ஆசிய நாடுகளின் தொழிலாளர்கள் எவ்வளவு பேர் சட்ட விரோதமாக குடியேறியுள்ளனர் என தெளிவான எண்ணிக்கையில் அலுவலர்களால் கூற முடியவதில்லை.

இந்நிலையில் கடந்த ஜனவரி 1 முதல் அறிவிக்கப்பட்ட 2வது பொது மன்னிப்பில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் சொந்த நாடுகளுக்கு திருப்பியுள்ளனர். இதில் 1996 ல் அறிவிக்கப்பட்ட முதலாவது பொது மன்னிப்பில் பயனடைந்தவர்கள் முகங்களையே அதிகளவில் பார்த்ததாக அலுவலர்கள் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக குடியேறியுள்ள அனைத்து தொழிலாளர்களில் 4 மாத பொது மன்னிப்பில் எவ்வளவு பேர் வெளியேறுவர் என்பது பற்றிய தெளிவான கருத்து தோன்றவில்லை என்று உள்துறை மற்றும் பாதுகாப்பு துறை அமைச்சகத்தின் செயலாளர் மேஜர் ஜெனரல் செய்ஃப் அல் சாஃபார் தெரிவித்தார்.

இச்சூழ்நிலையில் UAE அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட 4 மாத கால பொதுமன்னிப்பே சட்டவிரோதமாக குடியேறியுள்ள தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் கடைசி வாய்ப்பு என அலுவலக செய்தி குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது. ●



படிப்பகம்

www.padippakam.com

# வேலை உத்திரவாதம் இன்றி வெளிநாடு போக வேண்டாம்!

## தமிழக அரசு எச்சரிக்கை

தமிழக அரசுக்கு சமீப காலமாக கோலாலம்பூரில் உள்ள இந்திய தூதரகம் மற்றும் அபுதாபியில் உள்ள இந்திய தூதரகம் போன்றவற்றிலிருந்து சில தகவல்கள் வருகின்றன.

கோலாலம்பூர், அபுதாபி சிறைச்சாலைகள் மற்றும் மறுவாழ்வு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள நபர்களில் முகவரிகளை சரிபார்த்து அனுப்ப வேண்டும் என்று இந்திய தூதரகங்களிலிருந்து மாநில அரசுக்கு தெரிவிக்கப்படுகிறது.

விசாரணையில் தஞ்சாவூர், சிவகங்கை, கடலூர், விழுப்புரம், இராமநாதபுரம் மற்றும் இவற்றின் சுற்றுப்புறங்களில் உள்ள மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கானோர் மலேசியா, அரபுநாடுகள் போன்ற வெளிநாடுகளுக்கு சட்ட விரோத டிராவல்ஸ் ஏஜெண்டுகள் மூலம் முழுமை பெறாத ஆவணங்களை பெற்று சென்றவர்கள் இப்போது ஜெயில்களிலும் மறுவாழ்வு மையங்களிலும் வைக்கப்பட்டு உள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது.

மலேசியா, அரபுநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள் அனுப்பிய சரிபார்ப்பு நடவடிக்கை அடிப்படையில், மேற்கண்ட நாடுகளில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தாயகம் திரும்புவதற்கு வசதியாக அவர்களின் உறவினர்கள் விமான டிக்கெட்டுகளை எடுத்து அனுப்பினால் அவர்கள் சொந்த மாவட்டத்துக்கு திரும்பி அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

வெளிநாடு சென்றால் அதிகளவில் சம்பாதிக்கலாம் என்ற எண்ணத்தில், கல்வி அறிவில்லாதவர்கள் டிராவல் ஏஜெண்டுகளுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுக்கின்றனர்.

விசா, வேலை உத்திரவாதம், வேலைபார்க்கான அனுமதி போன்றவை முறையாக இல்லாததால் சிறைகளிலும், மறுவாழ்வு மையங்களிலும் தங்க வைக்கப்படும் நிலையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே வெளிநாடுகளுக்கு வேலைபார்க்க செல்பவர்கள் முறையான ஆவணங்கள் குறிப்பாக வேலைக்கான உத்திரவாதம், விசா போன்றவற்றில் மிக எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் இருக்க வேண்டும்.

-தமிழக அரசு உள்துறை செயலாளர் முனீர்ஹோதா வெளியிட்டுள்ள அறிக்கையில்...



படிப்பகம்

www.padippakam.com

### வேலூரில் போலி பாஸ்போர்ட்:

# விசாரணை நடத்த மத்திய பாஸ்போர்ட் அதிகாரிகள் வருகை!

வேலூர் மாவட்டத்தில் போலி பாஸ்போர்ட் பலருக்கு வழங்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலின் பேரில் விசாரணை நடத்த மத்திய பாஸ்போர்ட் அதிகாரிகள் வேலூர் விரைந்தனர்.

திருப்பத்தூரை அடுத்த பாச்சல் கிராமத்தினை சேர்ந்தவர் சென்னையில் ஏட்டாக பணிபுரிகிறார். அவரிடம் சென்னையில் ஒட்டலில் வேலை செய்யும் ஒருவர், ஒரு பாஸ்போர்ட்டை கீழே இருந்து எடுத்தாகவும் இதனை உரிய நபரிடம் சேர்த்து விடுங்கள் என்றும் கூறி அப்பாஸ்போர்ட்டை கொடுத்துள்ளார். போலீஸ்காரரும் பாஸ்போர்ட்டில் உள்ள முகவரியை பார்த்து நம்மூர் அருகில்தானே என்றும் பாஸ்போர்ட் நபரை பார்த்து கண்டுபிடித்து கொடுத்து விடலாம் என்ற நினைப்பில் திருப்பத்தூர் வந்துள்ளார்.

பாஸ்போர்ட்டில் கிருபாகரன், அவரது தந்தை குலசிங்கம், 57 சவுகத் அலிபேட்டை,திருப்பத்தூர் என்று இருந்தது. பாஸ்போர்ட்டில் உள்ள முகவரிக்கு சென்று போலீசார் விசாரித்ததில் அப்படி ஒருவர் இல்லை என்பது தெரிய வந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த போலீஸ்காரர் நமக்கு ஏன் வம்பு? என நினைத்து பாஸ்போர்ட் முகவரியிலிருந்த இப்ராகிம் என்பவரிடம் உங்கள் முகவரிதான் இப்பாஸ்போர்டில் உள்ளது என்றும் எனவே இதனை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள் என்றும் கூறிவிட்டு சென்றுவிட்டார்.

இதுபற்றி இப்ராகிம் திருப்பத்தூர் போலீசாரிடம் தகவல் கொடுத்துள்ளர். இப்ராகிம் வீட்டமுகவரியில் உள்ள இப்பாஸ்போர்ட் கடந்த 2000ம் வருடம் அக்டோபர் 27 ல் வழங்கப்பட்டுள்ளது. பாஸ்போர்ட் எண் பீ-2867974 என்று இருந்தது.

இந்த பாஸ்போர்ட் புதிதாக கொடுக்கப்பட்ட போது திருப்பத்தூர் போலீசார் விசாரணை நடத்தி கொடுத்தார்களா? என்பது பற்றி தெரியவில்லை.

இதனிடையே திருப்பத்தூர், ஆம்பூர், குடியாத்தம், பேர்ணாம்பட்டு, வாணியம்பாடி பகுதிகளில் இதே போல



படிப்பகம்

www.padippakam.com

# போலி பாஸ்போர்ட் வைத்திருந்த டிராவல் ஏஜெண்ட கைது!

போலி பாஸ்போர்ட் வைத்து இருந்ததாக டிராவல் ஏஜெண்ட் ஒருவரை இராமநாதபுரம் மாவட்ட குற்றவியல் போலீசார் கைது செய்தனர். இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏராளமான போலி பாஸ்போர்ட்டுகள் உள்ளதாக மாவட்ட காவல்துறைக்கு புகார் வந்தது. இதன் தொடர்பாக மாவட்ட காவல்துறை சூப்பிரண்டு அசோக்குமார் தாஸ் உரிய நடவடிக்கை எடுக்குமாறு காவல் துறையினருக்கு உத்தரவிட்டார். இராமநாதபுரம் மாவட்ட குற்றவியல் துணை



கண்காணிப்பாளர் ஜூலியட், இன்ஸ்பெக்டர் தங்கராஜ், சப் இன்ஸ்பெக்டர் சிவப்பிரகாசம் ஆகியோர் தீவிர ரோந்து நடவடிக்கை மேற்கொண்டனர்.

அப்போது இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே ஒரு நபர் போலீசாரை கண்டு நழுவியதாக தெரிகிறது. இதனால் சந்தேகமடைந்த போலீசார் அந்த நபரை பிடித்து சோதனை செய்தனர். அவர் வைத்திருந்த பையில் 3 போலி பாஸ்போர்ட்களும் 23 பாஸ்போர்ட் விண்ணப்பங்களும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டன.

நூற்றுக்கும் அதிகமான பாஸ்போர்ட்கள் போலீசார் விசாரணை செய்யாமலே அளித்த அறிக்கை மூலம் கொடுக்கப்பட்டதாக இரகசிய தகவல் கிடைத்தது.

இது பற்றி விசாரணை செய்ய மத்திய பாஸ்போர்ட் அதிகாரிகள் குழுவினர் நேரடியாக விசாரணை நடத்த திட்டமிட்டு சம்பந்தப்பட்ட பகுதிகளுக்கு சென்று விசாரணை நடத்தினர்.

விசாரணையில் மேற்கண்ட நபர் திருப்பாலைக்குடியை சேர்ந்த காதர்சுல்த்தான் (வயது48) என்றும் பாஸ்போர்ட் எடுத்து கொடுப்பதற்கான உரிமம் ஏதுமில்லாமல் துணை டிராவல் ஏஜெண்டாக செயல்பட்டு வந்தது தெரியவந்தது. இது குறித்து மாவட்ட குற்றவியல் போலீசார் வழக்கு பதிவு செய்து காதல் சுல்த்தானை இராமநாதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.



படிப்பகம்

www.padippakam.com

# கட்டாயக் கைரேகை:

# போலி பாஸ்போர்ட்டைத் தடுக்க புதிய முறை!



0 71486 03040 9

சென்னை மண்டல பாஸ்போர்ட் தலைமை அதிகாரி மதிவதனன் போலி பாஸ்போர்ட்டுகளை தடுக்க இனிமேல் பாஸ்போர்ட்டில் கைரேகை கட்டாயம் பதிவு செய்யப்படும் என்று கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது:

பாஸ்போர்ட் வழங்குவதில் பல்வேறு புதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றோம். போலி பாஸ்போர்ட்கள் இருக்கின்றது. அதே போல் ஒருவரே இரண்டு இடத்தில் பாஸ்போர்ட் வைத்து இருப்பார்கள். இவற்றை தவிர்க்க தமிழகத்தில் உள்ள அனைத்து பாஸ்போர்ட் மையங்களையும் கம்ப்யூட்டர் மூலம் இணைத்திருக்கிறோம். இதனால் ஒருவரே இரண்டு இடத்தில் பாஸ்போர்ட் எடுப்பது தவிர்க்கப்படும். இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் அனைத்து மையங்களும் கம்ப்யூட்டர் மூலம் இணைக்கப்பட்டு உள்ளது.

மேலும் பாஸ்போர்ட் அலுவலகங்களுடன் விமான நிலையம், துறைமுகம்



படிப்பகம்

www.padippakam.com

ஆகியவற்றை கம்ப்யூட்டர் மூலம் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாவட்டங்களில் செயல்பட்டு வரும் பாஸ்போர்ட் அலுவலகத்திலிருந்து விரைவு தபால் மூலம் விண்ணப்ப மனுக்கள் தலைமை அலுவலகத்துக்கு வருகிறது. அதே போல் இங்கு இருந்து கூரியர் மற்றும் விரைவு தபால் மூலம் பாஸ்போர்ட் அனுப்பப்படுகிறது. இதனால் 99% விண்ணப்பங்கள் கால தாமதம் இல்லாமல் முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது.




பாஸ்போர்ட்டுக்காக விண்ணப்பிக்க இருப்பவர்கள் நேரில் வந்து விண்ணப்பிக்க வேண்டும் இதன்படி மனு செய்ய வரும் போது குறைந்தது 3 மணி நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டும். அந்த சிரமத்தை தடுக்க புதிய முறையை கொண்டு வந்து இருக்கின்றோம். தொலைபேசியில் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க நேரம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். எந்த நாள், எந்த நேரம் என்று உங்களுக்கு சொல்லப்பட்டு இருக்கின்றதோ அந்த நேரத்தில் வந்து 10 நிமிடங்களில் மனு செய்து விட்டு செல்லலாம். இதனையும் சென்னை அலுவலகத்தில் தான் முதன் முறையாக அறிமுகப்படுத்தி இருக்கிறோம்.

போலி பாஸ்போர்ட் மற்றும் தீவிரவாதிகள் பாஸ்போர்ட் பெறுவதை தடுக்க புதிய முறையை பின்பற்ற இருக்கின்றோம். பாஸ்போர்ட் எடுக்க விண்ணப்பம் செய்பவர்கள் கைரேகையை பதிவு செய்து தர வேண்டும். அந்த ரேகை பாஸ்போர்ட் புத்தகத்தில் ஓர் இடத்தில் பதிவு செய்ய இருக்கிறோம். அவ்வாறு பதிவு செய்து விட்டால் யார் மீதாவது சந்தேகம் வந்தால் உடனே கைரேகையை பரிசோதனை செய்து உடனடியாக அடையாளம் தெரிந்து கொள்ள முடியும். அதே போல் மனு செய்தவர்கள் மீது சந்தேகம் இருந்தால் போலீசிடம் கைரேகை பரிசோதனை செய்த பிறகு தான் பாஸ்போர்ட் கொடுக்கப்படும். இந்த புதிய முறையை பின்பற்ற இருக்கிறோம். இந்த திட்டம் அமுலுக்கு வந்தால் பாஸ்போர்ட்டில் புகைப்படம் கூட ஒட்ட வேண்டியது இல்லை" என்று அவர் கூறினார்.

●



படிப்பகம்

www.padippakam.com

# "பாஸ்போர்ட்" பற்றிய சில குறிப்புகள்

பாஸ்போர்ட்- என்பது வெளிநாடு செல்பவர்களுக்கு நமது நாட்டில் கொடுக்கக் கூடிய அடையாள அட்டை ஆகும். இது இல்லாமல் யாரும் வெளிநாடுகளுக்கு செல்ல முடியாது. பாஸ்போர்ட் என்பது தமிழ்நாட்டில் திருச்சி மற்றும் சென்னையில் உள்ள மண்டல பாஸ்போர்ட் அலுவலகங்கள் மூலம் வழங்கப்படுகிறது.

தற்போது பாஸ்போர்ட் தேவையெனில் சென்னை மற்றும் திருச்சியில் உள்ள மண்டல பாஸ்போர்ட் அலுவலகங்களுக்கு செல்ல தேவை இல்லை. மாறாக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் 'பாஸ்போர்ட்'க்காகவே தனிப்பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது.

புதிதாக பாஸ்போர்ட் பெற விரும்பும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு சென்று விண்ணப்பத்தை பெற்று அதனை நிரப்பி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் புகைப்படங்கள், ரேசன் கார்டு நகல்கள் 2 மற்றும் 2 இருப்பிடச் சான்றிதழ் நகழ்கள் ஆகியவற்றை இணைத்து ரூ.1000/- க்கான கேட்பு காசோலையை மண்டல பாஸ்போர்ட் அலுவலர் *(Regional Passport Officer)* என்ற பெயருக்கு எடுத்து விண்ணப்பத்துடன் இணைத்து கொடுக்க வேண்டும். விண்ணப்பித்த 30 முதல் 45 நாட்களுக்குள் பாஸ்போர்ட் தற்போது கிடைக்கின்றது.

கிரிமினல் குற்றம் புரிந்து தண்டனை பெற்றதாக ஆவணங்கள் உள்ள நபர்களுக்கு பாஸ்போர்ட் கிடைக்காது. தனியார் ஏஜென்ஸிகள் மூலம் பெற்ற பாஸ்போர்ட்டை உண்மையானதா என்பது பற்றி பாஸ்போர்ட் அலுவலகங்களுக்கு சென்று சோதித்துக் கொள்ள வேண்டும். பாஸ்போர்ட் பெற்றவுடன் புகைப்படம், மண்டல பாஸ்போர்ட் அலுவலரின் கையெழுத்து ஆகியவை சரியாக உள்ளதா? என சோதித்து பார்த்துக் கொள்ள வேண்டும். உங்களுடைய பாஸ்போர்ட் காணாமல் போனால் உடனடியாக அருகில் உள்ள காவல் நிலையத்தில் தெரிவித்து பிறகு புதிய பாஸ்போர்ட் பெற விண்ணப்பிக்க வேண்டும்.

ஏற்கனவே பாஸ்போர்ட் பெற்று பாஸ்போர்டை புதுப்பிக்க விரும்புபவர்கள் பாஸ்போர்ட் புதுப்பிக்க வேண்டிய காலக்கெடு முடிவடைந்து ஒரு ஆண்டுக்குள் இருந்தால் ஏற்கனவே உள்ள பாஸ்போர்ட் மற்றும்



படிப்பகம்

www.padippakam.com

பாஸ்போர்ட்டின் 2 நகல்கள் மற்றும் ரூ.1000/- க்கான கேட்புக் காசோலையை விண்ணப்பத்துடன் இணைத்து கொடுக்க வேண்டும். பாஸ்போர்ட் புதுப்பிக்க வேண்டிய காலக்கெடு முடிவடைந்து ஒரு ஆண்டுக்கு மேல் ஆகியிருந்தால் பிறப்புச் சான்றிதழின் நகல்கள் 2, ரேசன் கார்டு நகல்கள் 2, பழைய பாஸ்போர்ட் நகல்கள் 2 மற்றும் பழைய பாஸ்போர்ட்டுடன் விண்ணப்பத்தை இணைத்து கொடுக்கவேண்டும்.

தக்கால் முறையில் பாஸ்போர்ட் பெற விரும்புபவர்கள் தாங்கள் அவசரமாக வெளிநாடு செல்ல வேண்டியதன் அவசியத்தை தக்க சான்றுகள் மூலம் நிருபிக்க வேண்டும். வேலை வாய்ப்பு பணிக்காக, படிப்பதற்காக, ஏதேனும் விசேஷ நிகழ்ச்சிகளுக்காக செல்ல விரும்புபவர்கள் அதற்கான சான்றுகளுடன் விண்ணப்பிக்க வேண்டும். இதற்கு கட்டணமாக ரூ.2500/- செலுத்த வேண்டும். தக்கால் முறையில் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் அந்தந்த பகுதியில் உள்ள போலீஸ் அதிகாரியிடம் சான்றிதழ் பெற்றுக் கொண்டு செல்ல வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பாஸ்போர்ட் அலுவலகத்தில் தக்கால் முறையில் பாஸ்போர்ட் பெற விண்ணப்பிக்க முடியாது.

# மாலத்தீவில் வேலை வாய்ப்பா?

## தமிழக அரசு எச்சரிக்கை!

மாலத்தீவில் உள்ள சில வேலை கொடுப்பவர்களும் மற்றும் இந்தியாவில் உள்ள சில முகவர்களும் மாலத்தீவில் பணி நியமனம் செய்யப்பட்ட இந்திய பணியாளர்களுக்கு தொல்லை கொடுப்பதுடன் இன்னல்களை தீர்வு செய்வதில் ஒத்துழைப்பு தருவதற்கு விரும்புவதில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

எனவே வேலை வாய்ப்புக்காக மாலத்தீவு செல்ல விரும்புகின்ற பணியாளர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியதுடன் மத்திய தொழிலாளர் அமைச்சத்தின் கீழ் செயல்படுகின்ற மத்திய தொழிலாளர் அமைச்சகத்தின் அலுவலகங்களிலிருந்து போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் வழிகாட்டுதல்களையும் பெற வேண்டும் என தமிழக அரசு கூறியுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# எந்தெந்த நாடுகளில் எத்தனை பேர் இந்தியர்கள்?

இந்தியர்கள் அதிலும் குறிப்பாக தமிழர்கள் இன்று உலகம் முழுவதும் பரவி உள்ளனர். இந்தியர்கள் எந்தெந்த முக்கியமான நாடுகளில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதை கீழ்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| கனடா | 8,51,000 |
| அமெரிக்கா | 16,78,765 |
| ஜெர்மனி | 35,000 |
| சவுதிஅரேபியா | 15,00,000 |
| குவைத் | 2,95,000 |
| பஹ்ரைன் | 1,30,000 |
| கத்தார் | 1,31,000 |
| ஐக்கிய அரபு எமிரேட் நாடுகள் | 9,50,000 |
| ஓமன் | 3,12,000 |
| ஏமன் | 1,00,900 |
| மொரீசியஸ் | 7,15,756 |
| மலேசியா | 16,65,000 |
| சிங்கப்பூர் | 3,07,000 |
| இந்தோனேசியா | 55,000 |
| ஹாங்காங் | 50,500 |
| தாய்லாந்து | 85,000 |
| மியான்மர் | 29,02,000 |
| பிஜித்தீவுகள் | 3,36,829 |
| நியூசிலாந்து | 55,000 |
| ஆஸ்திரேலியா | 1,90,000 |
| டான்சானியா | 90,000 |
| தென்ஆப்ரிக்கா | 10,00,000 |
| கென்யா | 1,02,500 |
| இஸ்ரே ல் | 45,300 |
| நைஜீரியா | 25,000 |
| நெதர்லாந்து | 2,17,000 |
| இங்கிலாந்து | 22,00,000 |
| பிரான்ஸ் | 65,000 |
| ஜமைக்கா | 61,500 |
| ஜிம்பாப்வே | 16,700 |
| ரஸ்யா | 16,044 |
| பிலிப்பைன்ஸ் | 38,000 |
| மாலத்தீவுகள் | 9,000 |
| ஜப்பான் | 10,000 |
| புருனை | 7,600 |
| நார்வே | 5,630 |



படிப்பகம்

www.padippakam.com

Kadal Kadantha Thozhilali

*A Quarterly Tamil Newsletter on Migrant Workers Rights*




## குடிபெயர்
## தொழிலாளர்
## உரிமைக்காகக்
## குரல்கொடுக்கும்
## அமைதி
## அறக்கட்டளையின்
## வெளியீடு

**கடல் கடந்த தொழிலாளி**

அமைதி அறக்கட்டளையின் குடிபெயர் தொழிலாளர் உரிமை மையம் சார்பில் இலாப நோக்கமற்ற முறையில் காலாண்டிதழாக தனிச்சுற்றாக வெளியிடப்படுகிறது.

தொடர்பு முகவரி:

**அமைதி அறக்கட்டளை**

காவலர் குடியிருப்பு அருகில், திருச்சி சாலை,
திண்டுக்கல் - 624 005 தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி: 0451 - 2410021 தொலைநகல்: 0451 - 410372
மின்னஞ்சல்: peacetrust@vsnl.com

Published By Migrant Rights Cell, PEACE TRUST, Near Police Colony,
Trichy Road, Dindigul- 624005. TamilNadu, India.
Phone: 0451- 2410021 Fax: 0451- 2410 372 Email: peacetrust@vsnl.com

படிப்பகம்